# சுற்றாடல் அமைச்சு

## குளிர்சாதனம் இறக்குமதி நிறுவனங்கள் மற்றும் குளிர்சாதனம் மற்றும் காற்று குளிறூட்டல் துறையின் சேவை வழங்கும் நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு விசேட அறிவித்தல்.

ஹைட்ரோபுளோறோகாபன் (HFC) தரத்தை கொண்ட குளிர்சாதனங்களின் இறக்குமதி கட்டுப்படுத்தல் இலங்கையில் ஹைட்ரோபுளோறோகாபன் (HFC) தரத்தை உடைய குளிர்சாதனங்களின் (Refrigerants/ Gases) பாவனையை கட்டுப்படுத்துவற்காக மொன்றியல் உடன்படிக்கையில் (Montreal Protocol) மேற்கொள் எப்பட்ட கிகாலி திருத்தம் (Kigali Amendment) மூலம் அனுமதிக்கப்பட்டது.

அதற்கேற்ப இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்கப்பட்ட 2019/10/03 மற்றும் 2020/06/30 திகதியிடப்பட்ட முறையே இலக்கம் 2143/36 மற்றும் இலக்கம் 2182/10 உடைய அரசாங்க வர்த்தமானிகளுக்கு ஏற்ப HFC தரத்தை உடைய குளிர்சாதனங்களை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்கத்தில் அனுமதிப்பத்திர இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் முலம் மட்டுமே இறக்குமதி செய்ய வேண்டும்.

HFC தரத்தை உடைய குளிர்சாதனங்களின் பாவனையை கட்டம் கட்டமாக நீக்குதல் சம்பந்தமாக அந்த குளிர்சாதனங்களின் இறக்குமதியாளர்கள் மற்றும் பாவனையாளர்கள் விசேடமாக அறிந்துக்கொள்ள வேண்டிய விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. 2020, 2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளுக்கான இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் HFC தரத்துடைய குளிர்சாதனங்களின் தொகையில் சாதாரண பெறுமதி இலங்கைகளுக்குரிய அடிப்படை யான பெறுமதியாக கருதப்படும் என்பதுடன் 2024 ஆம் ஆண்டின் பின்னர் அப்படியான அடிப்படை பெறுமதியிலும் கூடுதலாக HFC குளிர்சாதனங்களை இலங்கையில் இறக்குமதி செய்ய முடியாது.

2. இறக்குமதியாளர்களால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்படும் HFC தரத்துடைய குளிர்சாதனங்களின் தொகைக்கு சமமாக 2024 ஆம் ஆண்டின் பின்னர் அந்த இறக்குமதியாளர்களால் மட்டுமே HFC தரமுடைய குளிர்சாதனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் என்பதுடன் இதற்கேற்பவே HFC இறக்குமதி செய்யும் HFC இறக்குமதிக்கான கோட்டாவைப் பெறுவார்கள்.

3. 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் தவிர எந்தவொரு இறக்குமதியாளர்களும் 2023 ஆம் ஆண்டில் மட்டும் HFC தரத்துடைய குளிர்சாதனங்களை இறக்குமதி செய்தால் HFC கோட்டாவைப் பெறுவதற்காக அந்த இறக்குமதி நிறுவனங்களை தகுதி பெறமாட்டாது.

இந்த நடைமுறைகளுக்கேற்ப 2024 ஆம் ஆண்டிலிருந்து 2045 ஆம் ஆண்டு வரையில் HFC தரத்துடைய குளிர்சாதனங்களில் பாவனையை இலங்கையில் படிப்படியாக குறைக்கும் செயற்பாடுகளுக்கு சமாந்தரமாக புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள தொகைத் தொழிலாளர்களுக்காக வசதிகளை வழங்குதல் ஆகியன தேசிய ஓசோன் பிரிவால் மேற்கொள்ளப்படும்.

இதுபற்றிய மேலதிக விபரங்களை இந்த அமைச்சின் வாயு வளங்கள் முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவின் தொலைப்பேசி இலக்கங்கள் **011 2034221/ 011 20344222** மூலமும் **noulanka@gmail.com** மின்னஞ்சல் முகவரி மூலமும் அல்லது **www.nou.lk/env.gov.lk** வெப்தளம் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.


**செயலாளர்**
**சுற்றாடல் அமைச்சு**
**"சோபாதம்பியச" 416/சி/1**
**றொபர்ட்குணவர்தன மாவத்த, பத்தரமுல்ல.**